1970 செப்டம்பர் 1]

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதா.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதாவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

12. அரசினர் மசோதா—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move—

'That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது:

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இம்மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதா.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும், ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.